**ம.சா1 பால்சாமி, த/பெ.பழனியப்பன் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர் இல்லை.**

1) நான் என்ன வேலைசெய்து வருகிறேன் என்றால், பட்டதாரி ஆசிரியராக இருந்து 2016-ம் ஆண்டு ஒய்வு பெற்றுவிட்டேன்.இதுநாள் வரை நான் ஓய்வூதிய தொகை வாங்கி வருகிறேன் என்றால் சரிதான். நான் ஓய்வு பெறுவதற்கு முன்பு மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.60 ஆயிரம் ஆகும். நான் தற்போது கையில் வாங்கும் ஓய்வூதிய தொகை ரூ.18 ஆயிரம் ஆகும். நான் வேறு ஏதேனும் தொழில் செய்து வருகிறேனா என்றால் தொழில் எதுவும் செய்யவில்லை, விவசாயம் செய்து வருகிறேன்.

2) J.S. Tution நடத்தும் ஆசிரியர் சுந்தர்ராஜனை எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 2 ஆண்டுகளாக இருவரும் நெரூர் புதுப்பாளையத்தில் ஒரே பள்ளியில் பணிபுரிந்ததன் மூலம் பழக்கம். எந்த வருடம் முதல் நாங்கள் இருவரும் சேர்ந்து வேலை பார்த்தோம் என்றால், 2014 முதல் 2016 வரை சேர்ந்து வேலை பார்த்தோம். எனக்கு மணி என்ற பாலக்குமாரை எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியை எனக்கு யார் மூலமாகத் தெரிய வந்தது என்றால் ஆசிரியர் சுந்தர்ராஜன் மூலம் எனக்குத் தெரிய வந்தது. எனது மகள் சுந்தர்ராஜன் நடத்தி வந்த டியூசனில் படித்ததால் எனக்கு சுந்தர்ராஜன் பழக்கமானார்.

3) 2018 ம் ஆண்டு எனது மகள் என்ன படித்து வந்தார் என்றால் 10-ம் வகுப்பு படித்து வந்தார். J.S. Tution சென்டரை நடத்தி வரும் ஆசிரியர் யார் என்று எனக்கத் தெரியுமா என்றால் தெரியாது. எனது மகளுக்கு டியூசன் எடுத்த ஆசிரியரின் பெயர் என்ன என்றால் எனக்குத் தெரியாது. J.S. Tution சென்டரை சுந்ததர்ராஜன் ஆசிரியர் தான் நடத்தினார் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. J.S. Tution சென்டரல் எனது மகள் எத்தனை ஆண்டுகளாக படித்துவந்தார் என்றால் 3 ஆண்டுகளாக படித்து வந்தார்.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.

4) நான் ஆசிரியராக இருந்துகொண்டு 3 ஆண்டுகளாக எனது மகள் படித்த டியூசன் சென்டரின் ஆசிரியர் யார் என்று தெரியாது என்று சொல்வது வழக்கிற்காக பொய் என்றால் சரியல்ல. எனக்கும், சுந்தர்ராஜனுக்கும்இருக்கும் பழக்க வழக்கதை மறைப்பதற்காகத்தான் டியூசன் சென்டரை யார் நடத்தியது என்று தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை நான் எத்தனை முறை பார்த்திருப்பேன் என்றால் சுமார் 6 முறை பார்த்திருப்பேன். அவர் கரூர் மாவட்டத்தை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான், திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர். எதிரியின் செல்போன் நெம்பர் எனக்குத் தெரியுமா என்றால் அவர் விசிட்டிங் கார்டு கொடுத்தார் அதை தற்போதும்நான் வைத்துள்ளேன் என்று சாட்சி தனது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து காண்பித்தார்.

5) என்னுடைய போன் நெம்பர் 9942725321 ஆகும். என்னுடைய போனிலிருந்து எதிரிக்கு நான் எத்தனை முறை போன் செய்திருப்பேன் என்றால் நான் எதிரிக்கு போன் செய்ததே கிடையாது. எதிரி எனக்கு எத்தனை முறை போன் செய்துள்ளார் என்றால், அவரும் போன் செய்தது கிடையாது, நேரடியாக வந்ததுதான் பணம் கேட்டார். ஒரு முறை கூட போன் செய்யாத நபருக்குநான் கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2018, 2019-ம் ஆண்டுகளில் நான் வங்கியில்கடன் பெற்றுள்ளேனா என்றால், எந்தவிதமான கடன்களும் நான் பெறவில்லை.

6) எனது குடும்பத்தில் என்னை தவிர வருமானம் வரக்கூடிய அளவிற்கு சம்பாதிக்கும் நபர் யார் என்றால் யாரும் இல்லை. என் குடும்பத்தில் எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்றால் நான், எனது மகள், எனது சகோதரி உள்ளோம். நாங்கள் குடியிருக்கும் வீடானது சொந்த வீடா என்றால் பூர்வீகமான வீடுதான். எங்கள் மூன்று நபர்களுக்கு சராசரியாக மாதம் எவ்வளவு செலவாகும் என்றால் சுமார் ரூ.5000, 6000 ஆகும். 2019 ம் ஆண்டில் எனது மகள் எந்த பள்ளியில் பயின்று வந்தார் என்றால் பரணிபார்க்கில் படித்து வந்தார். அதில் வருட பீஸ் எவ்வளவு என்றால், ரூ.6000 அல்லது 7000 வரும். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மகள் விளையாட்டுத்துறையில் இருப்பதால் பள்ளி கட்டணம் குறைத்துத்தான் எனதுமகளுக்குபோடுவார்கள்.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்.

7) நான் எனது மகளுக்கு பள்ளி கட்டணம்செலுத்திய ரசீதுகளை தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள 3வது பாராவில் எதிரி நான் ஒப்புக்கொண்டபடி 29.02.2020 வரை வட்டி செலுத்தி வந்தார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு வட்டி மாதத்திற்கு என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை, 25.06.2020-ம் தேதியன்று ரூ.5400, ஒருமுறை 4500/-ம் வட்டிக்கு என்று கொடுத்தார். நான் எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள 26.05.2020 தேதி கோவிட் 19 லாக்டவுன் காலம் என்றால் இல்லை, செந்தில்குமார் என்பவரின் வீட்டிற்கு வந்து எதிரி காசோலையை கொடுத்தார்.

8) எதிரி எனக்கு காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் நேரம் என்ன இருக்கும் என்றால் மாலை 3 முதல் 4 இருக்கும், எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் நேரத்தில் யார் உடன் இருந்தார்கள் என்றால் செந்தில்குமார் உடன் இருந்தார். செந்தில்குமாரின் வீடு எங்குள்ளது என்றால் கரூர் ராஜாஜி தெருவில் உள்ளது. எனது வீட்டிற்கும், செந்தில்குமார் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 8 கி.மீ.தூரம் இருக்கும். கரூரிலிருந்து திண்டுக்கல் 75 கி.மீ.தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

9) திண்டுக்கல்லில் இருக்கும்எதிரி கரூருக்கு வந்த விவரம் எனக்கு எப்படித் தெரியும் என்றால் சுந்தர்ராஜன் சொல்லி எனக்குத் தெரியும். சுந்தர்ராஜனை குறித்து நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்.